ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2147/5 - 2019 ඔක්තෝබර් මස 28 වැනි සඳුදා - 2019.10.28
2147/5 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான்,*

(i) *2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதிய 2143/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணையில் எச். எஸ். தலைப்பு 03.02 மற்றும் 03.03 (எச். எஸ். குறியீட்டு இல. 0303.54 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மக்கரல் மீன் தவிர்ந்த) மீன் இறக்குமதியின் மீது ஒரு கிலோ கிராமிற்கு 10% அல்லது 100 ரூபாவாக அறவிடப்படும் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிலிருந்து ஒரு கிலோ கிராமிற்கு 25 ரூபாவை அறவீடு செய்த பின்னர் உள்ள தொகை ;*

*மற்றும்*

(ii) *2019, யூலை 18 ஆந் திகதிய 2132/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணையில் எச். எஸ். குறியீட்டு இல. 0904.21.10 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மிளகாய் (உலர வைக்கப்பட்ட, நசுக்கவோ அரைக்கவோபடாதவை) இறக்குமதியின் மீது ஒரு கிலோ கிராமிற்கு 25 ரூபாவாக அறவிடப்படும் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிலிருந்து ஒரு கிலோ கிராமிற்கு 20 ரூபாவையும்*

*விலக்களிப்புச் செய்தல் வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கின்றேன். இந்த உத்தரவின் பிரகாரம், மீன் இறக்குமதியின் மீது (எச். எஸ். தலைப்பு 03.02 மற்றும் 03.03, எச். எஸ். குறியீட்டு இல. 0303.54 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மக்கரல் மீன் தவிர்ந்த) ஒரு கிலோ கிராமிற்கு 25 ரூபாவையும், மிளகாய் இறக்குமதியின் மீது (உலரவைக்கப்பட்ட, நசுக்கவோ அரைக்கவோபடாதவை/ எச். எஸ். குறியீட்டு இல. 0904.21.10) ஒரு கிலோ கிராமிற்கு 5 ரூபாவையும் விசேட வியாபாரப் பண்ட அறவீடாக 2019, ஒற்றோபர் 29 ஆந் திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்கு அறவிடப்படுதல் வேண்டும்.*

*மங்கள சமரவீர,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2019, ஒற்றோபர் 28.*

*11-982*

1A-PG 4721 — 567 (2019/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.